◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED24 NEWS
हर खबर, हर शहर

நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN 24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

TAMIL NADU | நீட் 24 நியூஸ் · ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம் | 18 November 2026

வேலூர் மாவட்ட ஆட்சியர் பல்வேறு இடங்களில் நேரில் ஆய்வு!



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.11.2026) வேலூர் மாநகராட்சி, அண்ணாசாலை பகுதியில் உள்ள மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்து, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் செயல்பாடுகள், பணியாளர்களின் விவரம் மற்றும் திட்டச் செயல்பாடுகள் குறித்தும், பாதுகாப்பு, பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை கையாளும் முறை குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி விஜயா உட்பட பலர் உடனிருந்தனர்.

வேலூர் மாவட்டம் மாநகராட்சி பகுதி அண்ணாசாலை பகுதியில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் பி எஸ் லீலா அலெக்ஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் செயல்பாடுகள், பணியாளர்களின் விவரங்கள் மற்றும் திட்டச் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், அவர்களைப் பராமரிக்கும் முறைகள் குறித்தும் அலுவலர்களிடம் விரிவாகக் கேட்டறிந்தார். உடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் விஜயா உள்பட பலர் இருந்தனர்.

இதேபோல, வேலூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சி, குருமலை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை ஆய்வு செய்ததுடன், உணவின் தரம் மற்றும் அதன் சுவை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பிரேமலதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜய் சந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் ஜெயசுதா, அணைக்கட்டு வட்டாட்சியர் மகேஸ்வரி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

— A RAM PRABHU

LOCAL

கம்யூனிஸ்ட் கட்சியின் கையெழுத்து இயக்கம்: விருதுநகர் எம். ரெட்டியபட்டி பள்ளியின் அவல நிலை திருத்தம் கோரிக்கை



நவம்பர் 17, 2023 அன்று திருச்சுழி அருகே உள்ள எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. பள்ளியின் அவல நிலையை கண்டித்து, 16 கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடைபெற்றது.

பள்ளியில் பல ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும், ஆங்கில வழிக் கல்விக்கான நிரந்தர ஆசிரியர்களை நியமிக்க வேண்டும், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், மாணவர்களின் பாதுகாப்புக்காக சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும், காலியாக உள்ள வாட்ச்மேன், துப்புரவுப் பணியாளர், ஆய்வக உதவியாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பள்ளி நூலக வாயிலில் முகப்பு விளக்கு அமைக்க வேண்டும், காலை உணவு மற்றும் சத்துணவுத் திட்டங்களை முழுமையாகக் கண்காணிக்க வேண்டும், ஆபத்தான நிலையில் உள்ள மூன்று கட்டிடங்களை அகற்ற வேண்டும்.

ஆங்கில வழிக் கல்வியை 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்த வேண்டும், கூடுதல் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்த வேண்டும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் இருக்கைகள் மற்றும் எழுதும் மேசைகள் வழங்க வேண்டும். டிஜிட்டல் நூலகம் மற்றும் அறிவியல் சார்ந்த கல்வி மையம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 16 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சுழி ஒன்றியம் சார்பில் தலைமைத் தோழர் சி செல்வம், செயலாளர் முன்னிலை தோழர் ராமச்சந்திரன், ரெட்டியபட்டி கிளைச் செயலாளர் தோழர் மணிமாறன், வீதோச ஒன்றிய செயலாளர் தோழர் பிரேம்குமார், டைலர் பரட்ட நத்தம் கிளைச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் செந்தில்குமார் வழக்கறிஞர் முன்னிலையில் இயக்கம் தொடங்கப்பட்டது.

— Siva

காட்பாடி பகுதிகளில் மின் நிறுத்தம் அறிவிப்பு

வேலூர் மாவட்டம் காட்பாடி துணை மின் நிலையத்தில் அத்தியாவசிய பாராமரிப்பு பணிகள் நடைபெற உள்ள காரணமாக நாளை மறுநாள் 19 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை காட்பாடி, காந்திநகர், செங்குட்டை, கல்புதூர், காங்கேயநல்லூர், கழிஞ்சூர், வஞ்சூர், சேனூர், வண்டறந்தாங்கல், விருதம்பட்டு, கிறிஸ்டியான்பேட்டை, பள்ளிகுப்பம், வடுகன்குட்டை, எல்ஜி புதூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் மின் வினியோகம் இருக்காது என மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

— A RAM PRABHU

CRIME

விருதுநகர்: 19 வயது கல்லூரி மாணவர் வீரசோழன் பெரிய பள்ளிவாசல் அருகே கத்தி-அரிவாள் தாக்குதலில் காயமடைந்து, 22 வயது நாகராஜ் கைது



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, நரிக்குடி அருகே உள்ள வீரசோழன் பெரிய பள்ளிவாசல் அருகே, 19 வயது முத்துவேல் (முத்துவேல்) தனது நண்பர்களுடன் சென்ற போது, 6 மோட்டார் சைக்கிள்களில் 10-க்கும் மேற்பட்டோர் கொண்ட கும்பல் அவரை வழி மறைத்து, கத்தி மற்றும் அரிவாள் கொண்டு சுற்றி வளைத்து வெட்டிய தாக்குதலுக்கு உள்ளாகினார்.

முத்துவேல் அருப்புக்கோட்டை சௌடாம்பிகா தனியார் கல்லூரியில் டிப்ளமோ சிவில் என்ஜினீயரிங் படித்து வருகிறார். தாக்குதலில் அவரது தலை மற்றும் கைகளில் அரிவாள் வெட்டு விழுந்து, கடுமையான படுகாயம் ஏற்பட்டது. உடனடியாக மதுரை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

முத்துவேலின் தந்தை முருகன் (46) தாக்குதலுக்கான புகார் அளித்து, போலீசார் அஜித்குமார், தவமுருகன் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்துகின்றனர். அதே நேரத்தில், ராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா, K.நெடுங்குளம் பகுதியில் இருந்து 22 வயது நாகராஜ் (காளிமுத்து மகன்) கைது செய்யப்பட்டு, சம்பவத்தில் ஈடுபட்ட மற்றவர்களைத் தேடி வருகின்றனர்.

போலீசார் தற்போது மீதமுள்ள சந்தேக நபர்களைத் தேடி, சம்பவத்தின் முழுமையான விசாரணை முடித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளனர்.

— Siva

நாகை துறைமுகத்தில் 1ஆம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்



வங்கக்கடலில் உருவானது காற்றழுத்த தாழ்வு மண்டலம்: 17-ம் தேதி தீவிர புயலாக வலுவடைய வாய்ப்பு; நாகப்பட்டினம் துறைமுகத்தில் 1-ம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே சுமார் 860 கி.மீ தொலைவில் நிலைகொண்டுள்ளதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்ந்து வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை புயலாகவும், நாளை மறுநாள் நவம்பர் 17 மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் தீவிர புயலாகவும் வலுவடையக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நாகப்பட்டினம், சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

— MAHENDRAN M

கடலூரில் கந்த சஷ்டி விழாவையொட்டி ஸ்ரீ சுப்பிரமணிய கோயிலில். வேல் வாங்கும் நிகழ்ச்சி



கடலூர் மாவட்டம் புருகீஸ்பேட்டை கந்த சஷ்டி விழாவையொட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வேல் வாங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அரிஸ்டோ பள்ளியின் நிறுவனர் சிவகுமார் ஏற்பாட்டின் பேரில் ஆக்கூர் செல்வி செ.அமிர்தா பாட்டு, புதுவை ச. சீனிவாசன் வயலின், கடலூர் மு. பரமேஸ்வரன் மிருதங்கம் கடலூர் அ. முனுசாமி முகர்சிங் பக்தி, திருமுறை கச்சேரி மிக சிறப்பாக நடைபெற்றது.சிவக்குமார், பழனி ஏ.ஓ.குருநாதன் வழங்கினார்.

— MAHENDRAN M

LOCAL

விருதுநகர்: திருச்சுழி அரசு தொடக்கப்பள்ளி மேற்கூரை இடிந்து விழு - 30 மாணவர்கள் உயிர் தப்பினர்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள காரேந்தல் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அரசு தொடக்கப்பள்ளியில் இன்று காலை பெரும் விபத்து ஒன்று நிகழ்ந்தது. 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை சுமார் 30-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வரும் இந்தப் பள்ளியின் வகுப்பறை கட்டிடத்தின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது.

இனறு காலை பளளி திறகபபடட நிலையில், மாணவர்கள் வளாகத்தில் காலை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வகுப்பறையின் உள்பகுதியின் மேற்கூரை இடிந்து விழுந்ததால், அப்பகுதி தூசியும் புகையும் சூழ்ந்தது. இதனைக்கண்ட ஆசிரியர்கள் உடனடியாக மாணவர்களை மீட்டு பாதுகாப்பான வேறு வகுப்பறைகளுக்கு அழைத்துச் சென்றனர். இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக எந்த மாணவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த பழைய கட்டிடத்தில், ஏற்கனவே மழைநீர் உள்ளே புகுந்து பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன், சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்து மோசமான நிலையில் இருந்தது. இருப்பினும், மாணவர்கள் இப்போதும் அதே சேதமடைந்த கட்டிடத்திலேயே கல்வி பயின்று வருகின்றனர்.

எனவே, விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக, சேதமடைந்த பழைய கட்டிடத்தை முழுமையாக இடித்து அகற்றிவிட்டு, புதிய வகுப்பறை கட்டிடத்தை கட்டித் தருமாறு மாணவ, மாணவியரின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கும் தமிழக அரசுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

— Siva

POLITICS

புதுச்சேரி தற்காலிக சட்டப்பேரவைத் தலைவர் அன்பழகன் தேசிய பத்திரிகையாளர் தினம் கொண்டாடினார்



தேசிய பத்திரிகையாளர் தினத்தைப் பொருத்து, புதுச்சேரி தற்காலிக சட்டப்பேரவைத் தலைவர் அன்பழகன் செய்தியாளர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுடன் கேமரா மூலம் ஒளிப்பதிவு செய்து, செல்போனில் செல்பி வீடியோவும் எடுத்து மகிழ்ந்தார்.

இந்த சந்திப்பில் பத்திரிகையாளர்களுடன் பல புகைப்படங்கள் (செல்பிகள்) எடுத்து, அனைவரையும் ஊக்குவித்து, ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை ித்தார்.

— Sudhakaran, Puducherry

நாகை ஆட்சியரகத்தில் நடைப்பெற்ற மக்கள் தீர்க்கும் முகாமில் கோரிக்கை மனுகளை ஆட்சியர் பெற்றுக்கொண்டார்



நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பவணந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோ.அரங்கநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ர.ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

— MAHENDRAN M

புதுச்சேரி: 272 பெண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ₹40,000 தொழில் மூலதனக் கடன் காசோலை வழங்கப்பட்டது



புதுச்சேரியில் 272 பெண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு, பிரதம மந்திரி நுண் உணவு பதப்படுத்தும் திட்டத்தின் மூலம், தலா ₹40,000 வீதம், மொத்தம் ₹1,08,80,000 தொழில் மூலதனக் கடனுதவிக்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்த காசோலை வழங்கும் விழாவில், NDA அரசின் முதல்வர் திரு. N. ரங்கசாமி அவர்கள், பெண்களின் தொழில் முனைவுத் திறனை மேம்படுத்தும் நோக்கில், இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இந்த கடன் உதவித் திட்டம், பெண்கள் தொழில்முனைவோருக்கு நிதி ஆதரவு அளித்து, அவர்களின் தொழில்களை விரிவாக்க உதவுகிறது. 272 பெண்கள் உறுப்பினர்கள், இந்த நிதியை பயன்படுத்தி, தங்கள் வணிகங்களை மேம்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

— Sudhakaran, Puducherry

காரைக்குடியில் போலீசார் கொடி அணி வகுப்பு.



காரைக்குடி நகரில் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா தலைமையில் போலீசார் கொடி அணிவகுப்பு நடத்தினர்.இதில் 60 க்கும் மேற்பட்ட சிறப்பு காவல் படை போலீசார் கலந்து கொண்டனர்.

— M. Arumugam

WEATHER

முதலாம் எண் புயல் எச்சரிக்கை: சென்னை மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் கூண்டு ஏற்றம்



முதலாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை 24 மணி நேரம் செல்லுபடியாகும்.

இந்த எச்சரிக்கை சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட இடங்களை பாதிக்கிறது.

அரசு மற்றும் உள்ளூர் அதிகாரிகள் குடியிருப்பாளர்களை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்துகின்றனர். வீடுகளில் உள்ள பொருட்களை உறுதிப்படுத்தி, உயரமான இடங்களில் இருக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

புயல் எச்சரிக்கை காலத்தில் வெளிப்புறச் செயல்பாடுகளைத் தவிர்க்கவும், அவசர சேவைகளைத் தொடர்புகொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

— Sudhakaran, Puducherry

தன வழாவால கலநது கொண்ட அமைச்சர்.



காரைக்குடியில் உள்ள விநாயகா தனியார் மஹாலில் நேற்று தவெக சிவகங்கை கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பாக குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில்
மாண்புமிகு இயற்கை வளத்துறை

அமைச்சர் Dr. TK. பிரபு கலந்து கொண்டு குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். இதில் ஏராளமான தவெக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

— M. Arumugam

உருவானது புயல்



BreakingNews

உருவானது புயல் சின்னம்

வங்கக்கடலில் புயல் சின்னம் உருவானது; அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், 36 மணி நேரத்தில் புயல், 60 மணி நேரத்தில் தீவிரப்புயலாக வலுப்பெறும்

அக்வான் புயல் சென்னை எண்ணூர் - கடலூர் இடையே நவ.19-ஆம் தேதி இரவு கரையை கடக்க வாய்ப்பு

- தனியார் வானிலை ஆய்வாளர் ஹேமச்சந்தர்

— Sudhakaran, Puducherry

காரைக்குடியில் உணவுத்துறை அமைச்சர் திடீர் ஆய்வு.



காரைக்குடியில் நேற்று உணவுத்துறை அமைச்சர்

ப. வெங்கட்ரமணன் அவர்கள்

தமிழக முதல்வர் ச. ஜோசப் விஜய் அறிவுறுத்தலின்படி காரைக்குடியில் உள்பட பல்வேறு உணவுப் பொருட்கள் வழங்கும் கிடங்குகள் மற்றும் கடைகளில் உணவப் பொருட்களின் தரம் குறித்து நேரில் ஆய்வு மேற்க்கொண்டார்.

— M. Arumugam

LOCAL

புதுச்சேரியில் e-KYC செய்யாத குடும்ப அட்டைதாரர்களுக்கு நிலுவை DBT தொகை வழங்க நடவடிக்கை



புதுச்சேரி மாநிலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசிக்குப் பதிலாக வழங்கப்படும் DBT (Direct Benefit Transfer) தொகை, e-KYC செயல்முறை முடிக்காத காரணத்தால் சிலர் பெறாமல் நிலுவையில் உள்ளது. இதைத் தீர்க்கும் முயற்சியாக, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பல்வேறு புகார்கள் மற்றும் கோரிக்கைகள் பெறப்பட்டன.


மணிக்கு குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சரான திரு V.P. சிவக்கொழுந்து அவர்களின் தலைமையில் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் e-KYC செய்யாத குடும்ப அட்டைதாரர்களுக்கு DBT தொகை வழங்கப்படாத விவரம் அதிகாரிகளால் விளக்கப்பட்டு, தீர்வுக்கான நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டன.

அதன்படி, e-KYC செய்யாத குடும்ப அட்டைதாரர்கள் தங்களின் e-KYC ஐ நியாயவிலைக் கடைகளில் எளிதாக முடிக்கக் கூடிய வசதிகளை அமைக்க துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். இந்த வசதியின் கால அட்டவணை மற்றும் விவரங்கள் துறை இயக்குநரகம் மூலம் தனியாக அறிவிக்கப்படும்.

e-KYC முடித்த பின், இதுவரை பெறாத DBT தொகை நிலுவையில் உள்ள மாதங்களுக்கு வழங்கப்படும். தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அறிவிக்கப்பட்ட கால அட்டவணைப்படி நியாயவிலைக் கடைகளில் e-KYC செய்து, தங்கள் நலன்களைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

— Sudhakaran, Puducherry

சிக்கல் சிங்காரவேலர் கோவிலில் கந்த சஷ்டி தேரோட்டம்



தமிழ் கடவுளான முருகனின் அறுபடை வீடுகளுக்கு இணையான ஸ்தலமாக, நாகை மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சிக்கல் சிங்காரவேலவர் கோவில் விளங்குகிறது. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட சிக்கல் சிங்காரவேலவர் கோவிலின் கந்தசஷ்டி பெருவிழா கடந்த 13 ஆம் தேதி காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் வெகு விமர்சையாக துவங்கியது. கந்த சஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதையொட்டி சிங்காரவேலவர், வள்ளி, தெய்வானையுடன் தேரில் எழுந்தருளினர். அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் காமராஜ் தேரினை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைக்க, பக்தர்கள் நான்கு மாட வீதிகள் வழியாக கந்தனுக்கு அரோகரா... முருகனுக்கு அரோகரா... என பக்தி பரவசத்துடன் தேரினை இழுத்து வந்தனர். இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று முருகப்பெருமானை சாமி தரிசனம் செய்தனர். தேரோட்டத்தின் போது சிவ வாத்தியங்கள் முழங்க பரதநாட்டிய குழுவினரின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. கந்தசஷ்டி விழாவையொட்டி சிக்கல் சிங்காரவேலவர் கோயிலின் முக்கிய நிகழ்ச்சியான முருகப்பெருமான் தன் தாயிடம் வேல் வாங்கியதும் திருமேனி எங்கும் வியர்வை பொழியும் அருட்காட்சி தரும் நிகழ்ச்சி இன்று இரவு சிக்கலில் நடைபெறுகிறது. இதில் கோவிலில் வீற்றிருக்கும் வேல் நெடுங்கண்ணி அன்னையிடம், முருகப்பெருமான் 'சக்தி வேல் வாங்கி' திருச்செந்தூரில் 'சூரனை சம்ஹாரம்' செய்தது குறிப்பிடத்தக்கது.

— MAHENDRAN M

மறறும தமழநாடு வவசாய சஙகம சார்பில் பலவேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அனுப்பும் போராட்டம்



நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி தபால் நிலையம் முன்பாக உச்ச நீதிமன்றத்திற்கு தபால் அனுப்பும் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாய சங்கம் கீழையூர் ஒன்றிய குழு சார்பில் நடைப்பெற்றது. காவிரியின் குறுக்கே கர்நாடக அரசாங்கம் மேகத்தாட்டு அருகில் அணைக்கட்டு முயற்சிப்பதை நடுவர் மன்ற தீர்ப்பின்படி காவிரியில் குறுக்கே அணைக்கட்டக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கர்நாடகா அரசுக்கு வலியுறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் எம். ஹாஜா அலாவுதீன் தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய தலைவர் என்.முருகையன் தலைமை வகித்தனர். இப்போராட்ட நோக்கங்களை விளக்கி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில குழு உறுப்பினரும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலருமான டி.செல்வம் பேசினார்.இப்போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.காந்தி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் வி. சுப்பிரமணியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர்கள் டி.கண்ணையன், டி சந்திரகாசன்,தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய தலைவர் எஸ். பக்கிரிசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஒன்றிய செயலாளர் ஏ எஸ்.பகவத்சிங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூண்டி கிளை செயலாளர் இளையராஜா, பெரிய தும்பூர் கிளை செயலாளர் அறிவழகன், வாழக்கரை கிளை செயலாளர் தினேஷ், காமேஸ்வரம் கிளை செயலாளர் கவியரசன், சிந்தாமணி கிளை செயலாளர், சபாபதி கீழப்பிடாகை கிளை செயலாளர் ஞானசம்பந்தம், ஈசனூர் கிளை செயலாளர் பீட்டர்ராஜ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் எஸ் ராஜு, திருக்குவளை ஆறுமுகம், சோழ வித்யாபுரம் ஆறுமுகம், திருப்பூண்டி கிராம சங்கத் தலைவர் பாப்பையன், பெரியதும்பூர் கிராம சங்கர் செயலாளர் ஜி. அன்பழகன்,விவசாய சங்க ஒன்றிய குழு உறுப்பினர் கே. தவமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு தபால்கள் அனுப்பினர். கோரிக்கைகள்

காவிரியில் குறுக்கே கர்நாடக அரசு மேகதாட்டு அணை கட்டுவதை உச்ச நீதிமன்றம் உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும்

காவேரி டெல்டா மாவட்டத்தில் தற்பொழுது சம்பா தாளடி நெற்பயிர்கள் சாகுபடி நடைபெற்று வருகிறது. இந்தப் பயிர்களை பாதுகாத்திட இன்சூரன்ஸ் மிகவும் முக்கியமானதாகும் ஆனால் குத்தகை சாகுபடி விவசாயிகள் கோயில் நிலம் மடத்தின் நிலத்தை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் செய்வதற்கு மத்திய, மாநில அரசுகள் உடனடியாக ஏற்பாடு செய்திட வேண்டும்,மேலும் சாகுபடி விவசாயிகள் வேளாண்மை தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலமாக கூட்டுறவு கடன் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனவும் கோஷங்கள் எழுப்பினர்.

— MAHENDRAN M

உணவகம தறபபு வழா.



காரைக்குடி மாநகரின் மைய பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகம் புதிய ஆட்சி பதவிக்கு வந்ததும் ரூ 16 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்ட இவ் உணவகத்தை இன்று கனிமவளத்துறை அமைச்சர் டி. கே. பிரபு மற்றும் காரைக்குடி மாநகராட்சி பொறுப்பு மேயர் குணசேகரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

— M. Arumugam

LOCAL

கீழ்க்குடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய கல் வட்டங்கள், இரும்பு உலை தடயங்கள்: தொல்லியல் கண்டுபிடிப்பு



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள கீழ்க்குடி கிராமத்தில் தொல்லியல் துறை மாணவர் சுரேஷ் குருசாமி தலைமையில் பெருங்கற்காலம் மற்றும் சங்க காலத்தை சேர்ந்த கல் வட்டங்கள், கற்குவியல்கள், முதுமக்கள் தாழியின் பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சான்றுகள் அக்கால மக்களின் வாழ்வியல், இறந்தவர்களை அடக்கம் செய்யும் ஈமச்சடங்கு மரபுகளை அறிய உதவுகின்றன. மேலும், இரும்பு உருக்கு உலைகளின் தடயங்கள், கசடுகள், எச்சங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன.

15–16 ஆம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல் மற்றும் 5 சதிக்கற்கள் கண்டறியப்பட்டுள்ளன, இது சங்க காலத்தின் வீர மரபு, நினைவு வழிபாடுகள் மற்றும் பெண்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் பொக்கிஷ சான்றுகளாக கருதப்படுகிறது. ஆராய்ச்சி நிறுவனதத்தின கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர்களின் மேற்பார்வையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக தொல்லியல் துறையினர் விரைந்து அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு மேலும் பல தடயங்களை வெளிக்கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

— Siva

விருதுநகர் மாவட்டத்தில் கஞ்சா கடத்தல்: 1.25 கி.கி கஞ்சா பிடித்து, இளைஞர் கைது



போலீசார் திருச்சுழி காவல் சார்பு ஆய்வாளர் மகேஸ்வரன் தலைமையிலான குழு, விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் இருந்து காரியாபட்டி செல்லும் சாலையில், குச்சம்பட்டி புதூர் விலக்கு ரோடு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.\n\nஅந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞரை நிறுத்தி, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் சந்தேகம் அடைந்த போலீசார், அந்த இளைஞர் கொண்டு வந்த கட்டைப்பையை சோதனை செய்ததில், அதில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருப்பது தெரியவந்தது.\n\nகஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார், இருசக்கர வாகனம் மற்றும் அந்த இளைஞரை திருச்சுழி காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், அந்த இளைஞர் அருப்புக்கோட்டை அருகே உள்ள செம்பட்டி கிராமத்தை சேர்ந்த பெரியசாமி என்பவரின் மகன் பூமிநாதன் என்பதும், தற்போது குடும்பத்துடன் காரியாபட்டி தாலுகா முருகையாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருவதும் தெரியவந்தது.\n\nஇதனையடுத்து, போலீசார் 1 கிலோ 250 கிராம் உலர் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.\n\nசட்டவிரோதமாக கஞ்சா கடத்திய இளைஞர் பூமிநாதன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, திருச்சுழி போலீசார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர்.

— Siva

பகுதியல அமைசசர ஆயவு.



காரைக்குடி வழியாக பாயும் பழமை வாய்ந்த தேனாற்றில் கழிவு நீர் கலப்பதாக எழுந்த புகாரையடுத்து இன்று கனிமவளத்துரை அமைச்சர் டி. கே. பிரபு அவர்கள் லாவடியேந்தல் கிராம் அருகே உள்ள அணைக்கட்டு பகுதியை பார்வையிட்டார். உடன் அரசு அதிகாரிகள் இருந்தனர்.

— M. Arumugam

அரசு பள்ளியில் புதிய வகுப்பறைகளை திறந்து வைத்த அமைச்சர்



காரைக்குடி சரகத்திற்கு உட்பட்ட ஜெயங்கொண்டான் கிராமம் அரசு பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன. தலைமை ஆசிரியர் வேண்டுகோளுக்கிணங்க காரைக்குடி சட்டமன்ற உறுப்பினரும், கனிமவளத்துறை அமைச்சறுமான டி..கே. பிரபு அவர்கள் கலந்துகொண்டு வகுப்பறைகளை திறந்து வைத்தார். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் அவர்களும் கலந்து கொண்டார்.


— M. Arumugam

காரைக்குடி மாநகர் லட்சிய ஜனநாயக கட்சியின் புதிய செயலாளர்.



காரைக்குடி மாநகர லட்சிய ஜனநாயக கட்சியின் புதிய மாவட்ட செயலாளராக பொறியாளர் மேக்ஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு இலட்சிய ஜனநாயக கட்சியின் காரைக்குடி சட்டமன்றத்திற்கு உட்பட்ட அனைத்து உறுப்பினர்களும், நிர்வாகிகளும் ஆதரவு நல்குமாறு மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

காரைக்குடி - நான்கு மாணவர்களுக்காக செயல்படும் அரசு விடுதி.



காரைக்குடி அருகே புதுவயல் சமூக நீதி விடுதியில் 4 மாணவர்கள் மட்டுமே தங்கி படித்து வருகின்றனர். . ஊரின் ஒதுக்குப்புறத்தில் தனியாக உள்ள விடுதியில் காம்பவுண்ட் சுவர் இல்லை. விடுதியைச் சுற்றிலும் பலர் மது அருந்துகின்றனர். எனவே மாணவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து விடுதியை முறையாக பராமரிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர்.

— M. Arumugam

காட்பாடி ரயில் நிலையத்தில் பரபரப்பு! ரயிலில் ஏசி இயங்காததால் பயணிகள் போராட்டம்



வேலூர் மாவட்டம், காட்பாடி ரயில் நிலையத்தில் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் ரயிலில் ஏசி வசதி முறையாகச் செயல்படாததால் ஆத்திரமடைந்த பயணிகள் காட்பாடி ரயில் நிலையத்தில் ரயிலை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒன்றரை மணி நேரமாக ரயில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் மற்றும் ரயில் நிலையத்தில் பரபரப்பான சூழல் நிலவியது.

ரயிலில் பயணம் செய்ய உரிய கட்டணம் செலுத்தியும் அடிப்படை வசதியான ஏசி செயல்படாததால் பயணிகள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

ஏசி கோளாறை உடனடியாக சரிசெய்து, பயணிகளின் குறைகளை ரயில்வே நிர்வாகம் கவனிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. சரிசெய்யப்படும் என்ற உறுதியளித்த பிறகு ரயில் புறப்பட்டு சென்றது.

— A RAM PRABHU